2013 அக்டோபர் 29]

சேலம் மாவட்டத்தில் சேமித்து வைப்பதற்கான அவசியமும் ஏற்படுவதில்லை. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப அந்தப் பகுதியிலே சேமிப்புக் கிடங்கு தேவையென்று கேட்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற இந்த நேரம் ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பின்னர் ஆய்வு செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

கறவைக் கூடம்

***3180—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கீழஉப்பூரணியில் பால் பண்ணை கறவைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கீழஉப்பூரணியில் பால் பண்ணை கறவைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களக்காடு ஊராட்சி ஒன்றியம், சிங்கிக்குளம் பஞ்சாயத்து கீழஉப்பூரணி கிராமம் மற்றும் 13 கிராமங்களை உள்ளடக்கியது. கீழஉப்பூரணி கிராமத்தைச் சுற்றிலும் இடையன்குளம், மேலக்கிரியூர் ஆகிய பஞ்சாயத்துக்கள் உள்ளன. சுமார் 30 கிராமங்கள் கீழஉப்பூரணியின் அருகில் உள்ளன. இங்கு 3,000 பசுக்கள் மற்றும் 600 எருமை மாடுகளை வளர்த்து வருகிறார்கள். கிராம மக்களின் அடிப்படையான தொழில் பால் வியாபாரம். மழை, பனி மற்றும் வெயில் காலங்களிலே பால் உற்பத்தியாளர்கள் தங்களது கறவை மாடுகளைக் கொண்டு கறவை செய்ய மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனைத் தவிர்க்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட களக்காடு ஒன்றியத்தில், கீழஉப்பூரணி கிராமத்தில், கீழஉப்பூரணி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 70 உறுப்பினர்கள் உள்ளனர்.

இச்சங்கத்தில் நாளொன்றுக்கு 650 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, அதில் 80 லிட்டர் உள்ளூர் விற்பனை போக, மீதமுள்ள 570 லிட்டர் பால், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. தற்சமயம் சங்க அலுவலகம் வாடகை இடத்திலும், சங்கக் கறவைக் கூடம் தனியாருக்குச் சொந்தமான 12 சென்ட் நிலத்திலும் செயல்பட்டு வருகின்றன. சங்கத்திற்குச் சொந்தமாக நிலம் வாங்க நிதியாதாரம் ஏதுமில்லை. ஆதலால், கீழஉப்பூரணி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கறவைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், சங்கக் கறவைக் கூடத்திற்கான நிலம் பெறுவதற்குத் தேவையான நிதியாதாரம் சங்க அளவில் ஏற்படுத்தி, கறவைக் கூடம் சட்டமன்ற உறுப்பினர் நிதி பெற்று அல்லது திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கடன் பெற்று, இச்சங்கத்திற்குக் கறவைக் கூடம் கட்டித் தர இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதெல்லாம் கொடுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சியிலே, கண்டிப்பாக நீங்கள் அதை முன்வந்து செய்துதர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

சுத்திகரிப்பு நிலையம்

***3113—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—